**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti**

**Case No. C.C - 70/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மலர்விழி** | Caste | : |
| Father/Husband Name | : **கணேசன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.07.2025**

**முதல் விசாரணை**

நான் வலையப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். கடந்த 27.01.2018 ஆம் தேதியில் இரவு 09.30 மணியளவில் வீட்டில் வைத்து, அ.சா.1 எனது மகள் கைகுழந்தையுடன் இருந்தபோது, அங்கு வந்த அ.சா.1ன் கணவரான எதிரி அ.சா.1ன் இரண்டு கைகளையும் திருவி முதுகில் குத்தி, கீழே தள்ளிவிட்டார். நான் பக்கத்து வீட்டுகாரர்களை அழைத்ததும் எதிரி அங்கியிருந்து தப்பித்து ஓடிவிட்டார். பின்னர் உசிலம்பட்டி துணை கண்காணிப்பாளிடம் எனது மகள் புகார் கொடுத்து, உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டார் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது மகள் ஆவார். எனது மகளும் எதிரியும் விருப்பப்பட்டு எங்கள் அனுமதியுடன் திருமணம் நடைபெற்றது. எனக்கு அந்த

திருமணத்தில் விருப்பம் இல்லை. திருமணம் முடிந்தபிறகு அவர்கள் எதிரியின் பெற்றோர் வீட்டில் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு இருவரும் சந்தோசமாக இருந்தார்கள் என்றால் சரிதான். எனது சம்பந்தகாரர் வட்டி தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது இன்னொரு மகளின் திருமணத்திற்கும், எனது கணவரின் மருத்துவ சிகிச்சைக்கும் அ.சா.1ன் மூலம் எதிரியிடம் ரூபாய் 7,00,000/- கடன் வாங்கினோம் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எதிரி வரதட்சணையோ நகையோ எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிரி திருமணமான 2010 ஆம் ஆண்டு முதல் 2018 வரை எந்த வரதட்சணையும் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிரி தான் கடனாக கொடுத்த ரூபாய் 7,00,000/- திருப்பி கேட்டதால் எனது மகள் அ.சா.1 நாங்கள் எங்கள் வீட்டில் வைத்து கொண்டு எதிரியுடன் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் 27.01.2018 அன்று இரவு 08.30 மணியளவில் அ.சா.1 போன் செய்து எதிரியை வீட்டிற்கு வரசொன்னார் என்றால் சரியல்ல. எதிரியை வீட்டிற்குள் வரவிடவில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது மகள் வெளியே வந்து எதிரியிடம் பேசி கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. எதிரி எனது மகளை வெளியே அழைத்து பேசிகொண்டிருந்தார். அப்போது எதிரி தான் கொடுத்த கடன் ரூபாய் 7,00,000/- ஐ வாங்கி தரமாறு எனது மகளிடம் கேட்டார் என்றால் சரியல்ல. அப்போது நானும் எனது உறவினர்களும் எனது மருமகனை அடித்தோம் என்றால் சரியல்ல. அப்போது எனது மகள் சண்டையை விலக்கிவிட்டபோது எனது மகள் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எங்கள் மீது புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றார் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிக்கு முன்பே எதிரியின் மீது புகார் கொடுக்க எனது மகளுக்கு அழுத்தம் கொடுத்து புகார் கொடுத்தோம்

என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சைக்கு நான் எனது மகளுடன் உடன் சென்றேன். அப்போது மருத்துவரிடம் எதிரியின் பெயரை சொல்லாமல் தெரிந்த நபரால் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. காயம் எதிரியால் ஏற்பட்டிருந்தால் மருத்துவரிடம் எதிரியின் பெயரை சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. எனது மகள் கொடுத்து பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

S.d. Malarivizhi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.